பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

'The Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: ஆடி 17 (1—8—72) செவ்வாய் வெளியூர்: ஆடி 18 (2—8—72) புதன் [இதழ்: 41

# மனிதாபிமானத்துடனேயே எதனையும் அணுகுகிறோம்

## மாசு கற்பிக்கச் சிலர் முற்படுகிறார்கள்

## தவறான நம்பிக்கையில் செயல்படுவோர் தக்க பாடம் பெறுவர் -- திருச்செங்கோட்டில் கலைஞர் முழக்கம்

திருச்செங்கோடு, ஆக. 1—

"கடந்த 20 ஆண்டுகளில் எத்தனையோ துப்பாக்கிச் சூடுகளைத் தமிழகம் கண்டிருக்கிறது; ஓமந்தூரார் முதலமைச்சராகச் சென்னை மாநிலத்திற்கு இருந்தபோதும் சரி -- காமராசர் முதல்வராக இருந்தபோதும் சரி -- இராஜாஜி, பக்தவத்சலம் ஆகியோர் இருந்தபோதும் சரி -- அவர்கள் காலத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் குண்டடிபட்டுச் செத்தவர்களுக்காக அவர்கள் ஐந்து ரூபாயாவது கொடுத்தது உண்டா? ஆனால் நாங்கள் ரூ. 5,000 கொடுத்திருக்கிறோம்.

'இறந்துபோன உயிருக்கு இந்த ரூ 5000-தான் மதிப்பு' என்று நாங்கள் அதனை மதிப்பிட்டதில்லை; மனிதாபிமானத்தின் காரணமாகத்தான் -- அதற்கு ஒரு அடையாளமாகத்தான இந்தத் தொகையைத் தருகிறோம்.

"இறந்துபோனவர்கள் ஏன் இறந்தார்கள் -- எதற்காக இறந்தார்கள் -- எந்தக் கிளர்ச்சி காரணமாக இறந்தார்கள் -- என்றெல்லாம் நாங்கள் ஒருபோதும் எண்ணியதில்லை; இறந்தவர்களை -- இழந்தவர்களின் நிலையைத்தான் எண்ணிப் பார்த்து, அவர்களின் கவலையைத் தீர்ப்பதற்காகவே இந்தத் தொகையைத் அளிக்கிறோம்.

"இப்படி -- மக்களின் எந்தப் பிரச்சினையையும் இதயசுத்தியுடன் அணுகும் நம்முடைய அரசின்மீது குற்றஞ் சுமத்தவும் -- மாசு கற்பிக்கவும் சிலர் முற்பட்டிருக்கிறார்கள்.

"இந்தச் சிலருக்கு மத்திய அரசில் வேண்டியவர்கள் இருக்கிறார்கள் என்று கருதி அவர்கள் இப்படி நினைப்பார்களேயானால், 'அது தவறு' என்று எடுத்துக் கூறுகிறோம் -- காலம் பாடம் கற்பிக்கும்"

**என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், திருச்செங்கோட்டில் நடைபெற்ற மாபெரும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் தெள்ளத் தெளிவுறச் சுட்டிக்காட்டிக் கூறினார்.**

கூட்டத்திற்கு குடிநீர் வாரியத் தலைவர் செ. கந்தப்பன் எம்.எல் ஏ. தலைமை தாங்கினார்; கூட்டத்தில் திருப்பத்தூர் இராமமூர்த்தி, பி. ஆர். இலட்சுமிகாந்தன், ஆறுமுகம் எம்.எல்.ஏ., மா. முத்துசாமி எம். பி., ஈ. ஆர். கிருஷ்ணன் எம்.பி, அமைச்சர் க. இராசாராம் பேசினார்.

# சொல்லும் நியாயம்

## சொந்தக் கட்சிக்கு இல்லையா?

**இறுதியில் முதலமைச்சர் கலைஞர் அவர்கள், 'தமிழகத்தில் துப்பாக்கிப் பிரயோகங்களுக்கு நீதி விசாரணை நடத்தவேண்டும்' என்று டெல்லியிலிருந்து இங்குவந்து பேசிய மத்திய அமைச்சர்களான சி. சுப்பிரமணியம் -- மோகன் குமாரமங்கலம் ஆகியோருக்குப் பதிலளிக்கும் வகையில் கூறியதாவது:—**

"தமிழ்நாட்டில் நடந்த துப்பாக்கிப் பிரயோகங்களுக்கு நீதி விசாரணை வேண்டும் -- என்று மத்திய அமைச்சர்கள் மோகன குமாரமங்கலமும், சி. சுப்பிரமணியமும் பேசியிருக்கிறார்கள்; 'நீதி விசாரணை வைப்பதுதான் சிலாக்கியம்' என்று சி. சுப்பிரமணியம் -- அழுத்தந்திருத்தமாகச் சொல்லியிருக்கிறார்.

இதே சி. சுப்பிரமணியம் -- இதே தமிழகத்தில் அமைச்சராக இருந்தவர்தான்; அவர் அமைச்சராக இருந்தபோது காமராசர் முதலமைச்சர்; அப்போது முதுகளத்தூரில் கலவரம் நடந்து துப்பாக்கிப் பிரயோகங்கள் நடைபெற்றன; அன்றையதினம் அறிஞர் அண்ணா அவர்களும் -- பார்வர்டு பிளாக் கட்சித் தலைவர்களும் -- எதிர்க் கட்சியினரும், நீதி விசாரணை வேண்டும்' என்று சட்டமன்றத்திலேயே கூறினர்.

அப்போது முதலமைச்சர் காமராசருக்காகப் பேசிய சி. சுப்பிரமணியம், 'நீதி விசாரணை வைக்க முடியாது' என்று கூறினார்; 'ஏன்' என்று எதிர்க் கட்சியினர் கேட்டனர்; 'எல்லாவற்றுக்கும் நீதி விசாரணை வைத்தால் கலவரம் நடக்கும் பகுதிக்கே போலீசார் போகமாட்டார்கள்' என்று சுப்பிரமணியம் கூறினார்.

சி. சுப்பிரமணியத்தைவிட நான் வயதில் சிறியவன்; அவர் சொன்னதையே என்னால் திரும்பிச் சொல்ல முடியும்; ஆனாலும் -- அப்படித் திருப்பிச் சொல்லவில்லை -- சொல்லவும் மாட்டோம்; நாங்கள் முதலில் நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்ததை அரசு மறந்துவிடக்கூடாது!

# உ. பி. மாநிலத்துக்கு

## உபதேசம் செய்து பார்க்கட்டும்!

'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்பது போல் சி. சுப்பிரமணியம் இங்கே நம்மை விரட்டுகிறார்!

உத்தரப் பிரதேசத்தில் துப்பாக்கிப் பிரயோகத்தால் 25 பேர் மாண்டார்கள் – என்று அரசே ஒப்புக்கொண்டது; அங்கே போய், 'நீதி விசாரணை வை' என்று இவர்கள் இரண்டு பேரும் சொல்லியிருந்தால், அவர்களை அந்த மாநில முதலமைச்சர், 'விரட்டு – விரட்டு' என்று விரட்டியிருப்பார்!

இங்கே நம்மிடம் வந்து கூறுபவர்கள் – உத்தரப் பிரதேசத்திற்கும் போய், 'நீதி விசாரணை வை' என்று கூறியிருந்தால், 'நீ யார் சொல்ல' என்று உ.பி. முதல்வர் கமலபதி திரிபாதி கேட்டிருப்பார்! இந்திரா காந்தியாரிடம் கூறி, 'இந்த இரண்டு பிள்ளைகளையும் வீட்டுக்கு அனுப்புங்கள்' என்றும் கூறியிருப்பார்! அவ்வளவு செல்வாக்கு – அவரது கட்சியில் அவருக்கு!

உத்தரப் பிரதேசத்தில் நீதி விசாரணை வைத்துவிட்டு, இங்கே வந்து, 'பார் – பார்; நாங்கள் நீதி விசாரணை வைத்துவிட்டோம்' என்று கூறினாலாவது பொருத்தமிருக்கும்!

'நீ சுடவில்லையா – நான் சுட்டால் என்ன தவறு' என்று நாம் கேட்கவில்லை; துப்பாக்கிச் சூட்டில் யார் இறந்தாலும், இறந்தவர்களுக்காகக் கண்ணீர்விட்டுக் கதறும் மனிதாபிமானம்கொண்ட உள்ளம்தான் நமது உள்ளம்!"

## கண்டக்டர் வேலைக்குப் பட்டதாரிகள் போட்டி

புதுடில்லி, ஆக. 1—

"டில்லிப் போக்குவரத்துக் கார்ப்பரேஷனில் பஸ் கண்டக்டர்களாகப் பணியாற்ற 323 பட்டதாரிகள் மனுச் செய்திருக்கின்றனர்.

"இவர்களில் 176 பட்டதாரிகள் கண்டக்டர் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டனர்"

என்ற தகவலை, மக்களவையில் எழுத்து மூலம் அளித்த பதில் ஒன்றில் போக்குவரத்துத் துறை அமைச்சர் ராஜ்பகதூர் தெரிவித்தார்.

## வாழ்க்கைச் செலவு மேலும் கூடுகிறது!

புதுடில்லி, ஆக. 1—

இந்தியாவின் மொத்த விலைக் குறியீட்டு எண் ஜூலை 15-ந் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில் மேலும் உயர்ந்து 201.5 புள்ளியாகியிருக்கிறது; இதற்கு முந்திய வாரத்தில் இது 201.1 புள்ளியாக இருந்தது.

சென்ற மாதம் இதே வாரத்தில் இது 1.0 புள்ளி குறைவாக இருந்தது; ஓராண்டுக்கு முன் இருந்த விலைவாசி உயர்வுப் புள்ளியை விட இது 7.3 புள்ளி அதிகமாகும்.

## காட்டு நிலத்தில் ஆக்கிரமிப்பு

### கடும் நடவடிக்கை எடுக்க மைசூர் அரசு முடிவு

"காட்டு நிலங்களில் சட்ட விரோதமாக ஆக்கிரமித்துக் கொண்டிருப்போரை வெளியேற்ற அரசு கடுமையான நடவடிக்கைகளை எடுக்கும்"

என்று, மைசூர் விவசாய -- வனத் துறை அமைச்சர் கே. எச். படேல எச்சரித்தார்.

சட்டமன்றத்தில் கவனஈர்ப்புப் பிரேரணைக்குப் பதிலளிக்கையில அவர், இந்நோக்கம் ஈடேற உறுப்பினர்களின் ஒத்துழைப்பைக் கோரினார்.

"சட்ட விரோதமாக ஆக்கிரமித்துக்கொண்டவர்களை வெளியேற்றும் நடவடிக்கையில் யாருக்காவது சங்கடம் ஏற்பட்டால் தகுதியின் பேரில் தனி நபர்களின் பிரச்சினையை அரசு பரிசீலிக்கும்" என்று அவர் சொன்னார்.

## சென்னை -- திருவள்ளூர் இரயில் பாதை

### மின்சாரப் பாதையாக மாறும்

புதுடில்லி, ஆக. 1—

"சென்னை -- திருவள்ளூர் பகுதி இரயில் பாதையை மின்சாரப் பாதையாக்கும் பிரச்சினை இப்போது பரிசீலனையில் இருந்து வருகிறது"

என்று இரயில்வே துணையமைச்சர் குரேஷி, நாடாளுமன்ற மேலவையில் தெரிவித்தார்.

"திருவள்ளூருக்கு அப்பால் அரக்கோணம்வரை மின்சாரப் பாதையாக்கும் பிரச்சினை தற்போது பரிசீலனையில் இல்லை" என்றும் அவர் சொன்னார்.

## தி.மு.க. தலைமைச் செயற்குழு-- பொதுக்குழுக் கூட்டங்கள்

### ஒத்திவைப்பு

1972 ஆகஸ்டு 25, 26, 27 ஆகிய நாட்களில் கோவையில் நடைபெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த தலைமைச் செயற்குழு, பொதுக்குழுக் கூட்டங்கள் ஒத்திவைக்கப்படுகின்றன.

அடுத்து நடைபெறும் நாட்கள் முதலிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

'அறிவகம்' சென்னை–13
31—7—1972

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. க.:

## பூம்புகாரில் உருவாகும் கலைக்கூடம்

### அண்ணா பிறந்த நாளில் கலைஞர் திறந்துவைப்பார்

சீர்காழி, ஆக. 1—

பூம்புகாரில் ரூ. 3.50 இலட்சம் செலவில் கலைக்கூடம் அமைக்கப்படுகிறது; அறிஞர் அண்ணா பிறந்த நாளில் (செப்டம்பர் 15-ம் நாள்) இந்தக் கலைக்கூடத்தைத் திறக்க முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

கண்ணகியின் நினைவாக -- என்றும் அழியாமல் இருக்கும் வகையில் -- பூம்புகாரில் கலைக்கூடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது.

கலைக்கூடத்தில், கண்ணகியின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் சிற்பங்கள் இடம் பெற்றிருக்கின்றன.

மாதவியின் சிலை 8 அடி உயரத்தில் (3 1/2 டன் எடையில்) ஒரே கல்லில் செதுக்கப்பட்டிருக்கிறது. கலைக்கூடத்தின் நடுவில் நீண்ட சதுரமான நீராழி மண்டபத்தின் கரையில் -- மாதவி சிலை வைக்கப்பட்டு, அந்தச் சிலையின் நிழல் தண்ணீரில் தெரியும்படி ஏற்பாடுகள் நடக்கின்றன.

கலைக்கூடப் பணிகள் இரவு -- பகலாக நடைபெற்று வருகின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

இந்திரா காங்கிரசு ஆளும் மாநிலத்தில் நடந்த போலீசுக் காட்டுமிராண்டித் தர்பார் -- உ.பி. மாநிலத்துச்

சம்பவம் : தி. மு. க. --- முஸ்லிம் லீக் ஆய்வுக் குழு வெளியிடும் நெஞ்சுருக்கும் தகவல்கள்

# கொலை -- கொள்ளை -- தீ வைப்பு -- கற்பழிப்பு

[✶]

# அப்பாவி மக்கள்மீது அடக்குமுறையை ஏவி 60 பேரைச் சுட்டுத் தள்ளிய அக்கிரமம்

## தள்ளாத கிழவர் உயிருடன் எரிக்கப்பட்டார் -- தாயும் சேயும் கத்தியால் குத்திக் கொல்லப்பட்டனர்

### தொழுகைக்குச் சென்றவர்மீது தடியடி--87 மணி நேரம் இடைவிடா ஊரடங்குச் சட்டம்

சென்னை, ஜூலை 31---

**உ. பி. மாநிலத்தில், அலிகார் பல்கலைக் கழகச் சட்டத் திருத்தத்தை எதிர்த்து நடைபெற்ற கிளர்ச்சியினையொட்டி அங்கு நடைபெற்ற கலவரம் -- துப்பாக்கிச் சூடு -- அதன் விளைவுகள் ஆகியவற்றை நேரில் கண்டறிந்து வருவதற்காகத் திராவிட முன்னேற்றக் கழகம் -- முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகளால் அனுப்பப்பட்ட தூதுக் குழு, தனது அறிக்கையை அளித்துள்ளது.**

அந்த அறிக்கையில், தூதுக் குழுவின் உறுப்பினர்களான நாஞ்சில் கி. மனோகரன் எம்.பி. (தி.மு.க), தில்லை வில்லாளன் எம்.பி. (தி.மு.க). ஏ. கே. ஏ. அப்துஸ் சமது எம்.பி. (முஸ்லிம் லீக்), சாஜா மொய்தீன் எம்.பி. (முஸ்லிம் லீக்), ஷியாம் லால் யாதவ் எம்.பி. (பாரதீய கிராந்தி தளம்), டாக்டர் ஷமீம் அகமது (உ. பி. முஸ்லிம் லீக்), பஷீர் அகமது கான் (உ. பி. முஸ்லிம் லீக்) ஆகியோர் கையெழுத்திட்டுள்ளனர்.

குழு, தனது அறிக்கையில், போலீசார் குண்டர்களை ஏவியும் -- அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்துவிட்டும் மிருகத்தனமான மனித வேட்டையில் ஈடுபட்டதுடன் கொலை -- கொள்ளை -- கட்டடங்களுக்குத் தீ வைப்பு -- கற்பழிப்புப் போன்ற அக்கிரமங்களையும் துணிந்து செய்திருப்பதை விளக்கமாக எடுத்துரைத்துள்ளது. அறிக்கை வருமாறு :—

அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகத் திருத்தச் சட்டம் நிறைவேற்றத்தையடுத்து உத்தரப் பிரதேசத்தில் கலவரம் நடந்த இடங்களில் நேரில் சென்று உண்மையை அறியத் தி. மு. கழகமும் -- முஸ்லிம் லீகும் கூட்டாக அனுப்பிய இக்குழு, முதலில் ஒன்றைத் திட்டவட்டமாகத் தெளிவுபடுத்த விரும்புகிறது -- 'இம்மாநில காங்கிரசு நிர்வாகத்தின் செல்வாக்கைக் குறைப்பதற்கோ அல்லது தனிப்பட்டோர் சிலரை இழித்துரைப்பதற்கோ இக்குழு இங்கு வரவில்லை' என்பதுதான் அது !

'இந்த நாட்டின் உண்மைக் குடிமகன்' என்ற முறையில், பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள மக்களைச் சந்திப்பதும், அவர்களுக்கு ஏற்பட்ட சோதனைகளையும் வேதனைகளையும் அவர்களோடு விவாதிப்பதும் எங்களுடைய பொறுப்பு எனக் கருதுகிறோம்.

தொலைதூர மாநிலம் ஒன்றில் நிகழ்ந்துவிட்ட தொல்லையில், ஒரு மாநிலத்துக் கட்சியினர் தலையிடக்கூடாது -- என்று கூறுவது பொருந்தாத ஒன்று ; ஒருமைப்பாட்டு உணர்ச்சிக்கு ஒவ்வாதது ; உண்மையை அறியக் குழு நியமிக்கப்பட்ட செயலானது, 'எதையோ திரைப்பியடிக்கச் செய்யப்பட்ட செயலல்ல' என்பதை இந்தப் பெரிய நாட்டிற்கு நாங்கள் கூறிட விரும்புகிறோம்.

சிறுபான்மையினர் உரிமைக்காகத் தி. மு. கழகம் பாடுபட்டது -- பாடுபட்டும் வருகிறது -- இனியும் பாடுபடும்.

முஸ்லிம் லீகுடன் தி. மு. கழகம் கொண்டுள்ள உறவு உலகம் அறிந்த ஒன்றாகும் ; அந்த உறவை மாய்க்க இந்த உலகில் எந்தச் சக்தியும் கிடையாது.

பல்வேறுபட்ட மொழிகளை -- மதங்களை -- பண்பாடுகளை -- பாரம்பரியங்களை -- வரலாறுகளை -- சிக்கல்களைக்கொண்ட ஒரு பெரிய நாடு இந்தியா.

நம்முடைய சமுதாயம் -- பன்மைத்தன்மையுடையது ; பண்பாடு சிக்கலானது ; மக்களோ -- பல மொழிகளைப் பேசுவோர் ; பண்டித நேரு வர்ணித்ததுபோல், 'வேற்றுமையில் ஒற்றுமை' காண்பவர்களாக நாம் நீண்ட நெடுங்காலமாக இருந்துவந்திருக்கிறோம்.

சிறுபான்மையினர் நலன்களைப் பாதுகாப்பதும் -- அவர்களது உள்ளங்களில் உறுதி ஏற்படுத்தி இயல்பான வாழ்க்கை இயங்கச் செய்ய வேண்டுவதும் பெரும்பான்மை மக்களாக இருப்பவர்களின் தலையாய கடமையாகும்.

**" சிறுபான்மைச் சமூகத்தினர், விரக்தியாலும் -- அச்சத்தாலும் -- ஐயத்தாலும் அவதியுற அனுமதிக்கலாகாது" என்பது இக்குழுவின் கருத்தாகும்.**

**25 ஆண்டுகள் காங்கிரசு ஆண்ட பின்னரும், இந்நாடு இன்னும் இந்த உயரிய இலட்சியத்தை எய்திடவில்லை என்பதை இக்குழு வேதனையோடு தெரிவித்துக் கொள்கிறது.**

**உலகின் எல்லைகள் சுருங்கிக் கொண்டிருக்கின்றன ; உலகம் நெருக்கமாகி வருகிறது ; விஞ்ஞான-தொழில் நுணுக்கக் கண்டுபிடிப்புகளால் உலகம் முன்னேற்றப் பாதையில் செல்லுகிறது ; ஆனால் மதச் சார்பின்மை பற்றி அதிகம் பறைசாற்றப்படுகின்ற இந்நாடு இன்னும், சாதிப் பாகுபாடு போன்றவற்றில் சிக்குண்டிருக்கிறது.**

**வெறுக்கத்தக்க இந்த நிலையை, அந்தந்த நேரங்களில் மத வெறியர்களும் -- சுயநலக்காரர்களும் கிளறிவிடுகின்றனர் ; இந்த நிலையைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கின்றனர் ; எந்த இனத்தவரும் தங்கள் தனித் தன்மையை இழந்திட விரும்பவில்லை.**

**இந்நாட்டில் ஒவ்வொரு இனத்துக்கும் ஒரு பழமை உண்டு ; ஒவ்வொரு இனத்துக்கும் ஒரு வருங்காலம் இருக்கவேண்டும் ; இந்த அடிப்படைக்கு எதிராகப் பேசப்படும்போதுதான் தொல்லைகள் தலைதூக்குகின்றன ; 'ஒவ்வொருவரது உரிமையும் மதிக்கப்பட்டு -- அங்கீகரிக்கப்பட வேண்டும்' என்பது சனநாயக அமைப்பில் ஒரு கட்டாயமாகும்.**

இந்த உன்னத இலட்சியத்தால் உந்தப்பட்ட எங்கள் குழுவினர் -- உத்தரப் பிரதேசத்தில் கலவரங்களில் பாதிக்கப்பட்ட இடங்களைச் சென்று பார்த்தபோது -- போரின் காரணமாக அழிவுக்கு ஆளான பகுதிகளைப்போல் அப்பகுதிகள் பிரேதக் களையோடு காட்சி அளித்தன ;

ஜூலை 21-ம் நாள் நாங்கள் பெரோசாபாத்துக்குச் சென்று கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சுற்றிப் பார்த்தோம் ; 21-ம் நாள் காலை டில்லியிலிருந்து தாஜ் எக்ஸ்பிரஸ் மூலம் ஆக்ரா சென்றோம் ; ஆக்ரா இரயில் நிலையத்தில் ஆக்ரா நகர முஸ்லீம் லீக் செயலாளர் டாக்டர் முகம்மது சுலைமான் கான் மற்றும் லீக் ஊழியர்கள் எங்களை வரவேற்றனர்.

ஆக்ராவிலிருந்து பெரோசாபாத்துக்குக் கார்களில் போனோம் ; பெரோசாபாதத்தில் கலவரத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் அண்மைக் கலவரங்களில் தீயிட்டப்பட்டு மோசமான அளவுக்குச் சேதமடைந்து இடிந்து கிடந்த ஜூம்மா மசூதியையும் -- இஸ்லாமியக் கல்லூரியையும் சென்று பார்த்தோம் ; உள்ளூர் மக்களும் அவர்களது தலைவர்களும், அமைதியாக இருந்த முஸ்லீம் மக்கள் மீது ஜூன் 16-ம் நாளும், அதன் பின்னர் விஷமிகளும் -- போலீசும் அவிழ்த்து விடப்பட்ட அக்கிரமங்களையும், ஏவப்பட்ட கொடிய அடக்குமுறைகளையும் -- மிருகத்தனத்தையும் பற்றித் தாங்கள் நேருக்குநேர் கண்டவற்றை விளக்கிக் கூறினார்கள்.

அலிகார் முஸ்லிம் பல்கலைக்கழகத் திருத்தச் சட்டத்தினை எதிர்க்க முஸ்லீம் மக்கள் ஜூன் 16-ம் நாள் நடத்த இருந்த சனநாயகபூர்வமான -- அமைதியான ஆர்ப்பாட்டங்களை அடக்கி ஒடுக்க உத்தரப் பிரதேச மாநில அரசு முற்பட்டபோதே துன்பங்கள் தொடங்கின ; உத்தரப் பிரதேசத்தின் எல்லா நகரங்களிலும் -- பேரூர்களிலும் 144 தடையுத்தரவுகள் போடப்பட்டன ; அலிகார் பல்கலைக் கழகச் சட்டத்தை எதிர்த்து அமைதியாகக் கூட்டங்கள் நடத்தவும் முஸ்லீம் சமூகத்தினருக்கு அனுமதி மறுக்கப்பட்டது ; அவ்வாறே, இலட்சுமணபுரி போன்ற இடங்களில் கறுப்பு அடையாளச் சின்னங்கள் அணிவதையும், கறுப்புக் கொடிகள் கடைகளிலும் -- வீடுகளிலும் ஏற்றப்படுவதையும் அதிகாரிகள் தடை செய்தனர்.

பெரோசாபாத்தில் ஜூம்மா மசூதியில் வெள்ளிக்கிழமையன்று தொழுகையை முடித்துக்கொண்டு அவரவர் வீடுகளுக்கு அமைதியாகத் திரும்பிக்கொண்டிருந்த மக்கள்மீது போலீசார் தடியடி நடத்தி ஆத்திரமூட்டினர் ; முஸ்லீம்கள் ஊர்வலம் எதையும் நடத்தவில்லை ; எப்போதும்போலத் தொழுகை முடிந்து செல்லும் நேரத்தில் மசூதிக்கு வெளியே 6,000 பேர் திரண்டு சென்றனர் ; சில விஷமிகளும் மசூதிக்கு வெளியே கூடியிருந்தனர் ; முஸ்லீம் மக்களை ஆத்திரமூட்ட விரும்பிய அவர்கள் -- முஸ்லீம்களை நையாண்டி செய்ய மஞ்சள் நிற பாட்ஜுகளைக் குத்திக் கொண்டிருந்தனர்.

தடியடிப் பிரயோகத்துக்கு முஸ்லீம்கள் எதிர்ப்புத் தெரிவித்தபோது -- மகிபால் என்ற தலைமைக் காவலர் -- எவ்வித எச்சரிக்கையுமின்றி அவர்கள்மீது சுட்டார் ; இதைத் தொடர்ந்து காவலர்மீது முஸ்லீம்கள் கல்லெறியில் இறங்கினர் ; இதற்கிடையில் தனிப் போலீசுப் படைப் பிரிவு அங்கே வந்தது ; அவர்களும் முஸ்லீம்கள்மீது துப்பாக்கிச் சூடு நடத்தினர் ; மேலும் பலர் இதனால் காயமுற்றனர் ; நிலைமை மோசமடைந்தது ; இந்நிலையில், தீயிடல் -- கொள்ளையடித்தல் போன்றவற்றில் ஈடுபட விஷமிகளைப் போலீசு ஊக்குவித்தது.

இவைகளெல்லாம் பிற்பகல் 3-மணிமுதல் 5-மணிக்குள் நடந்தது ; ஊரடங்குச் சட்டம் மாலை 5-மணிக்குப் போடப்பட்டது ; இதுவரை எங்கும் கேட்டறியாத அளவுக்கும் பெரோசாபாத்தில் தொடர்ந்தாற்போல் 87 மணி நேர ஊரடங்குச் சட்டம் செயலில் இருந்தது.

விஷமிகள் -- முஸ்லீம் மக்கள் வாழும் பகுதிகளைத் தாக்கிட அனுமதிக்கப்பட்டனர் ; ஊரடங்குச் சட்டம் போடப்பட்டிருந்தும், குண்டர்கள் முஸ்லீம்கள் மக்கள் குடியிருந்த வீடுகளைத் தாக்கித் தீயிட்டுக் கொள்ளையடித்தனர் ; நகைகளையும் -- மதிப்புள்ள பொருள்களையும் குண்டர்களும், போலீசுப் படையினரும் கொள்ளையிட்டதுடன், கெட்ட நோக்கத்தோடு இளம் முஸ்லீம் பெண்களையும் அவர்கள் தாக்கினர் ; வயோதிகர்களையும், சிறுவர்களையும் அவர்கள் சுட்டனர் ; இவ்விதச் சம்பவங்களில் பெரும்பாலானவை ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் இருந்தபோதே நிகழ்ந்தவைகளாகும்.

மாநில ஆயுதந்தாங்கிய காவலர் படை இந்த நிகழ்ச்சிகள் நடவாது தடுப்பதற்குப் பதிலாக முஸ்லீம்களைத் தாக்கும்படியாக, விஷமிகளை ஊக்குவித்தது !

தங்கள் மிருகத்தனமான நடவடிக்கைகளுக்கு வகுப்புவாத வர்ணம் பூசிடும் நோக்கத்துடன் ஏழை முஸ்லீம்கள்மீது போலீசுப் படை தாக்குதல் நடத்திற்று ; ஏறத்தாழ 30 பெண்கள் போலீசுப் படையினராலும் -- குண்டர்களாலும் கற்பழிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

மாவட்ட மாஜிஸ்திரேட்டும் -- உயர் போலீசு அதிகாரியும் அவ்வூரில் இருந்தபோதுதான், போலீசுப்படை இத்தனையையும் செய்தது !

ஜூம்மா மசூதி தாக்கப்பட்டபோது, அதனுள்ளே எழுந்து நடமாட முடியாமலிருந்த தள்ளாத வயதினரான இமாம் என்பவர் உயிரோடு எரிக்கப்பட்டுச் கொல்லப்பட்டார் ! மசூதியில் போடப்பட்டிருந்த விலை உயர்ந்த கம்பளங்கள் யாவும் எரிக்கப்பட்டன !

இத்தனைக் கோரமான நிகழ்ச்சிகளும் மாநில ஆயுதந் தாங்கிய காவலர் படை மசூதிக்கு வெளியே இருந்தபோதே நிகழ்ந்துள்ளன !

ஜூம்மா மசூதி இந்துக்கள் நிறைந்த பகுதியில் உள்ளது ; அது இன்னும் மூடப்பட்டிருக்கிறது ; அதிகாரிகள் பழுதுபார்த்து வருகிறார்கள் ; ஆனால் நாங்கள், மசூதியின் தரையில மனிதச் சதையின் கரிய சின்னங்களைக் கண்டோம் !

அதிகாரிகளும் காவலரும் இந்த மிருகத்தனமான பயங்கரங்களைக் கண்டும் காணாதவர்களாக இருந்திருக்கிறார்கள் !

ஊரடங்குச் சட்டம் செயலில் இருந்த நேரத்தில், மசூதிக்கு வெளியேயும் -- முக்கிய சாலையிலும் இருந்த முஸ்லீம்களின் கடைகள் சூறையாடப்பட்டுத் தீயிடப்பட்டிருக்கின்றன !

இஸ்லாமியக் கல்லூரி, முஸ்லீம்களால் 35 ஆண்டுகட்குமுன் நிறுவப்பட்டு, நடத்தப்பட்டு வருவதாகும் ; ஊரடங்குச் சட்டம் செயலில் இருந்த நேரத்தில், இது பலமுறை தீயிடப்பட்டுள்ளது ; 60 சதவிகிதப் பெரும்பான்மையினராக இந்து மாணவர்களைக் கொண்டிருந்த இந்தக் கல்லூரி முழுவதும் அழிக்கப்பட்டுவிட்டது ; இதுவும் இந்துக்கள் நிறைந்த பகுதியில் இடம் பெற்றுள்ளது.

கல்லூரிக்குத் தீயிட்ட விஷமிகள், அங்கிருந்த மரச் சாமான்கள் அனைத்தையும் -- நூல்கள் அனைத்தையும் -- விஞ்ஞானப் பரிசோதனைக் கூடத்திலிருந்த பொருட்கள் அனைத்தையும் எரித்தனர் ; அவை அனைத்தும் வெறும் சாம்பல் குவியலாகக் கிடப்பதைப் பார்த்தோம் !

கல்லூரிக் கட்டடத்துக்கு ஏற்பட்டுள்ள சேதம் மிக அதிகம் ; இனி அதைப் பழுதுபார்த்துச் செப்பனிடுவதென்பது முடியாததாகும் ; அதை இடித்துத் தள்ளிவிட்டுப் புதிய கட்டடம் ஒன்று எழுப்புவது ஒன்றுதான் வழியாகும் ; கல்லூரிக்கு ஏற்பட்ட நட்டம் மட்டும் ரூ. 6 இலட்சம் இருக்குமென்று மதிப்பிடப்பட்டுள்ளது.

முஸ்லீம்களுக்குச் சொந்தமான வீடுகள் -- கடைகள் -- வளையல் தொழிற்சாலைகள் -- எரிபொருள் சேமிப்புகள் ஆகியவை கொள்ளையிடப்பட்டுத் தீயிடப்பட்டிருக்கின்றன ! அகமது நகர் போன்ற பகுதிகள் முற்றிலும் அழிக்கப்பட்டுக் கிடக்கின்றன !

ஏதுமறியாத முஸ்லீம்கள் அவர்களது வீடுகளிலிருந்து இழுத்துச் செல்லப்பட்டுப் போலீசு நிலையங்களில் கடுமையாக அடிக்கப்பட்ட பின்னரே சிறைக்கு அனுப்பப்பட்டிருக்கின்றனர் !

மாநில ஆயுதந்தாங்கிய போலீசுப் படை -- உள்ளூர்ப் போலீசுப் படை ஆகியவற்றின் நடத்தைகள் மிருகத்தனமாகவும் -- காட்டுமிராண்டித்தனமாகவும் இருந்துள்ளது ! கைது செய்யப்பட்ட முஸ்லீம்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர் என்பதோடு அவர்கள் உணவில்லாமலே வைக்கப்பட்டிருந்தார்கள் ! குடிக்கத் தண்ணீர்கூடக் கொடுக்காமல் கடும் வெயிலில் 24 மணி நேரம் முதல் 26 மணி நேரம் வரையில் வைக்கப்பட்டிருந்தார்கள் ! தண்ணீர் கேட்டு அவர்கள் அபயக் குரல் கொடுத்தபோது, போலீசுக்காரர்கள் அவர்கள்மீது சிறுநீர் கழித்தார்கள் எனச் சொல்லப்படுகிறது.

வயதான சுதந்தரப் போராட்ட வீரர்கள் சிலர், 'பிரிட்டிஷார் காலத்தில் மிகவும் கொடுமையாக நடந்துகொண்ட போலீசார் கூடச் சுதந்தரப் போராட்டத்தை ஒடுக்க இத்தனை மிருகத்தனமாகவும், காட்டுமிராண்டித் தனமாகவும் நடந்துகொள்ளவில்லை' என்று எங்களிடம் கூறினர்.

இந்த அக்கிரமச் செயல்களால், முகமது ஈது என்பவர், ஆக்ரா சிறைக்கு அழைத்துச் செல்லப்படுகையில் நா வறட்சியால் மரணமடைந்திருக்கிறார் !

பெரோசாபாத்தில் ஏழை முஸ்லிம் மக்கள் அதிகம் பேர் பாதிக்கப்பட்டு அவர்களில் பலர் இறந்துவிட்டனர் ; அவர்கள் சொத்துக்களை இழந்தார்கள் !

பெரோசாபாத்தில் 26 பேர் உயிரிழந்ததாக அதிகாரபூர்வமாகத் தெரிவிக்கப்படுகிறது ; ஆனால் உள்ளூர் மக்கள் -- பொறுப்பான மனிதர்களும்கூட, 'அறுபது பேருக்குமேல் பெரோசாபாத் கலவரத்தில் இறந்தனர்' என்று தெரிவித்தார்கள்.

காங்கிரசு நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சுபத்ரா ஜோஷியும், இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரான விஜய்பால் சிங்கும், 'செக்குலர் டெமாகிரசி' என்ற ஏட்டில் வெளியாகியுள்ள அவர்களது அறிக்கையில், 'இறந்தவர்கள் எண்ணிக்கை அறுபதுக்குமேல் இருக்கும்' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஒரு இளம் இந்துவைத் தவிர இறந்தவர்கள் அனைவரும் முஸ்லிம்கள் ; இந்த ஒருவரும்கூட, ஆயுதப் போலீசுப் படையினர் தவறாக அவரை, 'முஸ்லிம்' என்று கருதிச் சுட்டுவிட்டதால் இறந்தவராவார் ; இந்த இளைஞர் உடுத்தியிருந்த ஆடையும் -- அவரது தோற்றமும் அவரை ஒரு முஸ்லிம் என்று நினைக்கச் செய்திருக்கிறது !

கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பாலோர் முஸ்லிம்கள் ; அவர்கள் மீது பொய் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன ; பின்னர், சில முஸ்லிம் அல்லாதவர்களையும் கைது செய்திருக்கிறார்கள் -- 'நாங்கள் பாரபட்சமற்றவர்கள்' என்று காட்டிக் கொள்வதற்காக !

ஜூலை 22-ந் தேதி வாரணாசிக்கு எங்கள் குழு புறப்பட்டது ; எங்கள் இரயில் கான்பூர் புகைவண்டி நிலயத்தை அடைந்தபோது, எங்களுக்கு மாலையிட உள்ளூர் முஸ்லீம் லீக் ஊழியர்கள் அங்கே இருந்தனர் ; அவர்கள், 'தி. மு. க.—முஸ்லீம் லீக் ஒற்றுமை வாழ்க' என்றும் முழக்கமிட்டனர்.

முகல்சராய் இரயில் நிலயத்தில், வாரணாசி முஸ்லீம் லீக் நிர்வாகிகளும் -- ஊழியர்களும் அதிகாலை வேளையில் எங்களை வரவேற்றனர் ; பாரதீய கிராந்தி தளத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் ஷியாம் லால் யாதவ் பி. என். சிங் எம் எல் ஏ. ஆகியோரும் மற்றும் வேறு அரசியல் கட்சிகளின் ஊழியர்களும் நாங்கள் தங்கியிருந்த ஓட்டலுக்கு வந்து எங்களைச் சந்தித்தனர் ; வாரணாசி நகர பாரதீய கிராந்தி தளக் கிளையின் தலைவர் ஜெய்னுல் பஷார், அங்கு அமைதியாக இருந்த முஸ்லீம் லீக் மக்களின் மீது ஆயுதப் போலீசுப்படை -- உள்ளூர்ப் போலீசுக் குண்டர்கள் -- சமூக விரோதிகள் ஆகியோரின் உதவி கொண்டு நடத்திய அக்கிரமங்களை எங்களிடம் விளக்கினர் ; 'இது ஒரு வகுப்புக் கலவரம் அல்ல ; ஆனால் போலீசு நடவடிக்கைதான்' என்று அவர் எங்களிடம் கூறினர்.

வாரணாசி -- உத்தரப் பிரதேச முதல்வர் -- பண்டிதர் கமலபதி திரிபாதியின் சொந்த ஊர் ; ஆக உள்ளூர் நிர்வாகத்தினர், 'பண்டிட்ஜி அவர்களின் முன்னுத்தரவு அல்லாமல் தாங்களாகவே எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது' என்பதை பாரதீய கிராந்தி தளத் தலைவர் விளக்கினர்.

ஆயுதப் படையும் -- போலீசும் நடத்திய அக்கிரமச் செயல்கள் பற்றி முதலமைச்சரிடம் தெரிவித்தபோது, அவற்றுக்கு அவர் நியாயம் கற்பித்ததோடு, 'ஆயுதப் படை என்பது ஒரு அதிரடிப் படை' என்றும், 'தலையை நோக்கிச் சுடவேண்டுமே அல்லாமல் காலில் சுட்டால் அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்' என்றும் கூறினர்.

முதலமைச்சரின் இந்தக் கூற்றை நேரில் கேட்டறிந்த அரசியல் கட்சித் தலைவர்கள், தலைமை அமைச்சரிடமே எடுத்துக் கூறியிருக்கிறார்கள் -- என்கின்ற விவரமும் எங்களுக்கும் தெரிவிக்கப்பட்டது.

பெரோசாபாத்தைப் போலவே வாரணாசியிலும் அலிகார் முஸ்லிம் பல்கலைக் கழகச் சட்டத்தை எதிர்த்து அமைதியாகக் கிளர்ச்சி நடத்த முற்பட்டபோது, அதை ஒடுக்க அரசு நிர்வாகமும் -- போலீசும் எடுத்த நடவடிக்கைகளால் இந்தத் துன்பம் தொடங்கிற்று ; அலிகார் சட்டத்தை எதிர்த்து ஜூன் 16-ந் நாளன்று 'துக்க தினம்' அனுசரிக்குமாறு பல்கலைக் கழகத்தின் பழைய மாணவர் சங்கமும் -- முஸ்லீம்களின் அமைப்புகள், அரசியல் கட்சிகளும் -- அரசியல் கட்சிகள் அல்லாதவைகளும் கேட்டுக்கொண்டிருந்தன ; ஆனால் அது எவ்வளவுதான் அமைதிபூர்வமானதாக இருந்தாலும் -- மாநில அரசு உத்தரவிட்டிருந்ததால் -- அதை அனுமதிக்க உள்ளூர் அதிகாரிகள் மறுத்தனர் ; மாவட்ட மாஜிஸ்திரேட் அமைதியாகப் பொதுக்கூட்டம் நடத்தவும் அனுமதி மறுத்தார்.

அதற்கு இரண்டுநாள் முன்பாக மார்க்சிஸ்டுக் கட்சிப் பொதுக்கூட்டம் நடத்த அவ்வூரில் அனுமதி தரப்பட்டிருக்கிறது ; மாவட்ட மாஜிஸ்திரேட்டிடம் இது சுட்டிக் காட்டப்பட்டபோது, 'அலிகார் கிளர்ச்சியை ஒடுக்குவதற்காகவே 144 தடையுத்தரவு போடப்பட்டிருக்கிறது ; ஆகவே அனுமதி மறுக்கப்படுகிறது' என்றும் அவர் கூறியிருக்கிறார் ; கூட்ட அமைப்பாளர்கள் கூட்டத்தை ரத்துச் செய்துவிட்டனர் ; அவர்கள் தடையை மீறவில்லை ; எல்லோரும் துணைப் போலீசு சூப்பிரண்டெண்டு திரு. சண்டோலா என்பவர் மீதே புகார் செய்தனர் ; அவர் மேற்பார்வையிலிருந்த நகரின் தெற்குப் பகுதியில்தான் கலவரங்கள் எல்லாம் நடைபெற்றன.

அடுத்த பகுதியாக வடபுறத்தில் ஒரு சிறு சம்பவம் தவிர வேறு அசம்பாவிதங்கள் ஏதும் நடைபெறவில்லை ; நகரில் வடக்குப் பகுதியே கலவரங்கள் மூளக்கூடிய பகுதி என்றும், அங்கேதான் இதற்கு முன்பு கலவரங்கள் நிகழ்ந்திருக்கின்றன என்றும் அவர்கள் கூறினர்கள்.

கறுப்புச் சின்னங்கள் அணிந்தோரை -- கறுப்புக் கொடிகள் ஏற்றியவர்களை -- கடைகளை மூடி அர்த்தால் செய்தவர்களை -- வாரணாசியின் தென் பகுதி துணைப் போலீசு சூப்பிரண்டெண்டு தலைமையில் ஆயுதப் படையினர் மிரட்டிக் கெடுபிடி செய்தனர்.

16-ந்தேதி துக்க நாள் அனுசரிக்க 15-ந்தேதியே ஆயத்தங்கள் நடைபெற்றன. அங்கு போலீசார், 'டால் மந்திர' பகுதியில் இரண்டு இளைஞர்களைக் கைது செய்தனர் ; கறுப்புக் கொடிகளையும் -- தோள்பட்டைச் சின்னங்களையும் அகற்றுவதில் ஆயுதப் போலீசுப் படைகள் ஈடுபட்டபோது, தொல்லை தொடங்கிற்று ; நைசராக் மசூதியில் ஒரு சப்-இன்ஸ்பெக்டரும், ஆயுதப் போலீசுப் படையும், பூட்டப்பட்டிருந்த கதவுகளை உடைத்துக்கொண்டு உள்ளே சென்று -- மேலே பறக்கவிடப்பட்டிருந்த கறுப்புக் கொடியைக் கீழே இறக்கியதுடன், 'முஆஜின்' என்று அழைக்கப்படுகின்றவரை (தொழுகைக்கு அழைப்பவர்) ஈவு இரக்கமற்று அடித்து இழிமொழிகளால் ஏசினர் !

அக்கம்பக்கத்திலிருந்த முஸ்லீம் மக்கள் இதை எதிர்த்துக் கேட்க வந்தபோது, பழுதுபார்க்கப்படுவந்த அந்த மசூதியின் மீதிருந்து மக்களின்மீது கற்களை வீசினர் போலீசார் !

சில முஸ்லீம்கள் இது கண்டு கோபமுற்று, அந்தக் கற்களைப் போலீசார்மீதே எறிந்தனர் ; இதன் பேரில் ஆயுதப் போலீசும் -- உள்ளூர் போலீசும் அங்கிருந்த இந்து சமூகத்தினரைத் தூண்டிவிட முயற்சித்து அதில் வெற்றியும் கண்டனர் ; முஸ்லீம்களைத் தாக்கும்படியும் -- அவர்களது வீடுகளைச் சூறையாடும்படியும் இந்துக்களை போலீசார் தூண்டிவிட்டனர் !

அதன்பின், அருகிலிருந்த முஸ்லீம் வீடுகள் பலவற்றில் போலீசார் நுழைந்து -- உள்ளே இருந்தவர்களை அடித்து அவமதித்து -- பெண்களை இழிமொழிகளால் ஏசினர் ; அந்த வீடுகளில் இருந்தவர்களைப் போலீசு நிலயத்துக்கு இழுத்துச் சென்றனர் : குண்டர்கள் -- பழைய குற்றவாளிகள் ஆகியோரின் துணைகொண்டு வீடுகளில் ஆயுதப் போலீசுப் படையும் -- உள்ளூர்ப் போலீசுப் படையும் கொள்ளையடித்ததுடன், பெண்களின் நகைகளையும் பிடுங்கிச் சென்றனர் ; அதன் பிறகு போலீசுத் துணை சூப்பிரண்டெண்டு சண்டோலாவின் மேற்பார்வையில் இருக்கும் பகுதிகள் பலவற்றில் ஏககாலத்தில் முஸ்லீம் மக்களின் வீடுகள் சூறையாடப்பட்டுத் தீயிடப்பட்டன ; கொலை -- கொள்ளை -- தீயிடல் ஆகியவற்றிற்குப் பிறகும் ஏழை முஸ்லீம்கள் போலீசு நிலயங்களுக்கு இழுத்துச் செல்லப்பட்டு அங்கு அடிக்கப்பட்டதுடன், தண்ணீரும் உணவுமின்றி வைக்கப்பட்டிருந்தனர் ; ஒடிந்த கைகளுடனும் -- கால்களுடனும் இருந்த பலரை நாங்கள் பார்த்தோம் ! போலீசு வேண்டுமென்றே அவர்களது கைகால்களை ஒடித்தது ; இரண்டு கைகளும் இரண்டு கால்களும் முறிக்கப்பட்ட நிலையில் ஒரு மனிதனை நாங்கள் பார்த்தோம் ; மரியாதைக்குரியவர்களும் -- நோய்வாய்ப்பட்டிருந்தவர்களும் கூடப் பொய் வழக்குகளில் சிக்கவைக்கப்பட்டிருக்கிறார்கள் ! இம்மாதிரிச் சம்பவங்கள் பலவற்றில் துணை சூப்பிரண்டெண்டு சண்டோலாவும், சப்-இன்ஸ்பெக்டர்கள் பலரும் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் !

ஜூன் 17-ந் தேதியும்—18-ந் தேதியும் மிக மோசமான நாட்கள் ; பெரிய போலீசு அதிகாரி அப்போது ஓய்வில் இருந்தார் ; துணைப் போலீசு அதிகாரியும்—டி. ஐ ஜி.-யும் மேற்பார்வையிட்டனர் ; உத்தரப் பிரதேசத்து இணை ஐ ஜி அந்த நகருக்கு வந்திருந்தார் ; ஆயினும், ஏழை முஸ்லீம் மக்களின்மீது அக்கிரமச் செயல்களைச் செய்ய ஆயுதப் படையும்—உள்ளூர் போலீசும் முழுச் சுதந்தரம் கொண்டிருந்தனர்.

ஜூன் 16-ந் தேதி ஆயுதப் போலீசும் -- உள்ளூர்ப் போலீசும் -- அவர்களால் தூண்டப்பட்ட பழைய குற்றவாளிகளும், நகரின் பல்வேறு பகுதிகளில் தொழுகை முடித்துத் திரும்பிக் கொண்டிருந்த மக்களைத் தாக்கினர் ; அவர்களில் பலர் கட்டியிருந்த கைக்கடிகாரங்களும் -- பணமும் -- கறுப்புச் சின்னங்களும் பறித்துச் செல்லப்பட்டன ; மாவட்ட மாஜிஸ்திரேட்டுக்கு இது பற்றிப் புகார் கூறப்பட்டது ; ஆயினும், அதைக் கட்டுப்படுத்த எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை ; இதிலிருந்து தொல்லை பரவ ஆரம்பித்தது.

**வயோதிகர்கள் -- ஊனமுற்றோர் -- பெண்கள் -- குழந்தைகள் ஆகியோரும் சம்மாளிடப்படவில்லை ; ஒரு வீட்டில் ஒரு தாயும் -- அவளது கைக்குழந்தையும் போலீசாராலும் -- குண்டர்களாலும் கத்தியால் குத்தப்பட்டுக் கொல்லப்பட்டனர்.**

**மற்றொரு வீட்டில் துணைப் போலீசு சூப்பிரண்டெண்டு சண்டோலா, ஒரு சிறுவனைச் சுட்டார் ; அச்சிறுவனை வேறு சில விஷமிகளும் கத்தியால் குத்தினர் ; சிறுவன் அந்த இடத்திலேயே மரணமடைந்தான் ; ஒரு பெண்ணின் நகைகளைப் பிடுங்கிச் செல்லப் போலீசாரும் -- குண்டர்களும் முயற்சித்தபோது, அதைத் தடுக்க முயன்றவனே இந்தச் சிறுவன்.**

**இங்குள்ள இஸ்லாமியப் பள்ளியில் கற்பிக்க வந்துள்ள அராபியப் பேராசிரியர் ஒருவர் வீட்டிலும் சண்டோலாவும் -- ஆயுதப் படையினர் சிலரும் நுழைந்து அவரது தாடியைப் பிடித்து இழுத்தனர் ; அவரது மனைவியைத் துன்புறுத்தினர் ; அப்பெண்ணின் 'பர்தா'வைப் பிடுங்கினர் ; விலையுயர்ந்த பொருட்களை எடுத்துச் சென்றனர் ; வேறு பல பொருட்களை உடைத்தனர் !**

**இந்த வீட்டில் இருந்தபடியே பக்கத்து மசூதியில் தொழுகைக்கு அழைத்துக் கொண்டிருந்த 'முஆஜினை' நோக்கிச் சுட்டனர் ; கண் பார்வையற்ற அந்த முஆஜின், அங்கேயே சுருண்டு விழுந்து இறந்தார் !**

மாவட்ட மாஜிஸ்திரேட்டும் -- மத்தியப் புலனாய்வுத் துறையினரும் குறிப்பிட்ட இச்சம்பவம் பற்றி விசாரணை நடத்த (மத்திய அரசின் உத்தரவின் பேரில்) அங்கு வந்தபோது -- அராபியப் பேராசிரியர், இந்தச் சண்டோலா என்ற அதிகாரியை அவர்களிடம் அடையாளம் காட்டினார் !

சண்டோலா மீதும் -- இந்தக் குற்றத்துக்குப் பொறுப்பானவர்கள் மீதும் இதுவரையில் எந்தவித நடவடிக்கையும் எடுக்காதது விசித்திரமாக இருக்கிறது.

**மதன்புராவிலும் -- தனுத்புராவிலும் பல வீடுகள் சூறையாடப்பட்டுக் கொளுத்தப்பட்டன ; விலையுயர்ந்த பனாரசுப் புடவைகள் எடுத்துச் செல்லப்பட்டன ; நெசவாளர்களின் தறிகளுக்குத் தீயிட்டுக் கொளுத்தப்பட்டன ; ஆயுதப் படை -- உள்ளூர்ப் போலீசு -- குண்டர்கள் ஆகியோர் பணத்தையும், வேறு மதிப்புள்ள பொருட்களையும் கொள்ளையிட்டுச் சென்றனர் ; இங்கே ஆயுதப் படை -- போலீசு ஆகியோர் நடத்திய துப்பாக்கிச் சூடுகளில் பலர் பலியாகியிருக்கின்றனர் !**

**இந்த அக்கிரமங்கள், வாரணாசியின் புறநகர்ப் பகுதிக்கும் பரவிற்று ; கக்கர்வா கிராமம் படுநாசமடைந்திருப்பதை நாங்கள் பார்த்தோம் ; அந்தக் கிராமத்திலுள்ள முஸ்லிம்களின் வீடுகள் 24-ம், மசூதியும் கொளுத்தப்பட்டுள்ளன ; இன்று அங்கே ஒருவரும் இல்லை ; இந்த ஏழை முஸ்லிம்கள், நகரிலுள்ள தங்கள் உறவினர் இல்லங்களில் அகதிகளாக இருக்கின்றனர் ; அங்கே இப்போது இடிபாடுகளைத் தவிர வேறொன்றும் இல்லை !**

**இதேபோல், பார்டியா என்னுமிடத்தில் போலீசும் -- ஆயுதப் படையும், குண்டர்கள் -- சமூக விரோதிகளுடன் அங்கிருந்த வீடுகளை மும்முனைகளிலிருந்து தாக்கினர், வீடுகளைச் சூறையாடிப் பணத்தையும் -- நகைகளையும் கொள்ளையடித்துச் சென்றனர் ; ஆயுதப் படையினர் இரும்பு இரும்புப் பீரோக்களையும் -- பணப் பெட்டகங்களையும் உடைத்துத் திறந்தனர் ; இந்தக் கிராமத்து ஏழை முஸ்லிம்கள்மீது ஆயுதப் படை துப்பாக்கிப் பிரயோகம் நடத்தி அவர்களில் இருவரைக் கொன்றது, அந்த நெசவுத் தறிகள் தீயிடப்பட்டு -- பனாரஸ் புடவைகள் எடுத்துச் செல்லப்பட்டன ; அவை அத்தனையும் சூறையாடப்பட்ட வீடுகளுக்கு அருகே இருந்த, ஆயுதப் படை முகாமைச் சேர்ந்தவர்களால் நடந்தப்பட்டவை, அந்த கிராமத்திலிருந்த ஆடுகளையும் -- கோழிகளையும்கூட அவர்கள் எடுத்துச் சென்றனர் !**

ஏழை முஸ்லிம்கள்மீது போலீசு நடத்திய அக்கிரமச் செயல்களை ஜனசங்க மாநகராட்சி உறுப்பினர் திவாரி எங்களைச் சந்தித்துக் கூறினர் ; 'அந்த வட்டாரத்தில் மரியாதைக்குரிய முஸ்லீம்களும் கைது செய்யப்பட்டுக் கடுமையாக அடிக்கப்பட்டனர்' என்று அவர் தெரிவித்தார் ; அவர்கள் இப்போது பொய் வழக்குகளில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள்.

பல மசூதிகளும் -- சமாதிகளும் -- குடிநீர்க் கிணறுகளும் சேதப்படுத்தப்பட்டுள்ளன ; உயிர்ச் சேதமும் -- பொருட் சேதமும் மிகவும் அதிகப்படியான இருக்கின்றன ; அதிகாரபூர்வமாக இறந்தவர்கள் எண்ணிக்கை எட்டு என்று கொடுக்கப்படுகிறது ; ஆனால், 'போலீசு -- ஆயுதப் படை ஆகியவற்றின் துப்பாக்கிச் சூடுகளாலும், கத்திக் குத்துக்களாலும் இறந்தவர்கள் தொகை அதிகம்' என்று கூறப்பட்டது.

முஸ்லீம்களுக்குச் சொந்தமான பல பெரிய கடைகள், ஊரடங்குச் சட்டம் செயலில் இருந்த நேரத்தில் சூறையாடப்பட்டிருக்கின்றன ; அநேகமாக இந்த எல்லாக் கொள்ளைகளும் -- அக்கிரமங்களும், தீயிடலும் -- கொலையும் ஊரடங்குச் சட்டம் செயலில் இருந்த நேரத்திலேயே நடந்திருக்கின்றன !

" முஸ்லீம் சமூகத்துக்கு எதிராகப் போலீசும் -- ஆயுதப் படையும் நடத்திய அக்கிரமச் செயல்களை ஆளும் காங்கிரசு தவிர ஏனைய அரசியல் கட்சிகள் அனைத்தும் கண்டித்து -- நீதி விசாரணை கோரியிருக்கின்றன " என்றும் சொல்லப்பட்டது ; ஆனால் உ. பி. அரசு, போலீசு -- இன்ஸ்பெக்டர் ஜெனரலை விசாரணை நடத்தும்படி கூறியிருக்கிறது ; அவரோ, இந்த வேலையை 'சி.ஐ.டி.'-க்களிடம் விட்டுவிட்டார் !

' பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நட்டஈடு வழங்கப்பட வேண்டும் ; சேதமுற்ற கடைகள் -- வீடுகள் -- தொழுகை இடங்கள் -- கல்வி நிலையங்கள் ஆகியவற்றை அரசே மீண்டும் கட்டித் தரவேண்டும் !! என்று நாங்கள் கூறுகிறோம்.

கலவரங்களால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு உ. பி.-யைச்

(4-ம் பக்கம் பார்க்க)

# ஜனசங்க உறுப்பினர்களின் போக்கு -- தலைமையமைச்சர் இந்திரா கண்டனம்

புதுடில்லி, ஆக. 1—

நாடாளுமன்றத்தின் மாரிக் காலக் கூட்டத் தொடர் நேற்று தொடங்கியதும், அவையில் ஒரே கூச்சலும் குழப்பமுமாக இருந்தது.

சிம்லா ஒப்பந்தத்தைக் கண்டித்து ஜன சங்கத்தினர், அவையிலும் —வெளியிலும் கிளர்ச்சி நடத்தினர்.

சிம்லா ஒப்பந்தத் தீர்மானத்தை வெளியுறவுத்துறை அமைச்சர் சுவரண் சிங் படிக்கத் துவங்கியதும் ஜன சங்கத்தினர், 'நாடாளுமன்றம் கூடுவதற்கு இரண்டே நாட்கள் இருக்கும்போது, அவசர அவசரமாகக் குடியரசுத் தலைவர் அதற்கு ஒப்புதல் அளித்ததற்காக அமைச்சர் முதலில் மன்னிப்புக் கோரவேண்டும்' என்று வற்புறுத்தினர்.

ஜன சங்கத்தினரின் ஆட்சேபனையைப் பொருட்படுத்தாமல் அமைச்சர் சுவரண் சிங் தொடர்ந்து தீர்மானத்தைப் படித்துக் கொண்டிருக்கவே, ஜன சங்க உறுப்பினர்கள் அனைவரும் ஆளும் கட்சி உறுப்பினர்களின் முன்வந்து நின்று அரசாங்கப் போக்கைக் கண்டித்துக் குரல் எழுப்பியதுடன், ஒப்பந்த நகலையும் கிழித்துப் போட்டனர்; சுவரண் சிங் படித்து முடிந்ததும் அவை உணவுக்காக ஒத்திவைக்கப்பட்டது.

பிறகு நடைபெற்ற விவாதத்தில் குறுக்கிட்டுப் பேசிய தலைமையமைச்சர் இந்திரா காந்தி, ஜன சங்கத்தினரின் போக்கைக் கடுமையாகக் கண்டித்தார்; 'சிம்லா ஒப்பந்தம் ஒரு பெரிய வெற்றி என்று நான் கூறிக்கொள்ள விரும்பவில்லையாயினும், அது இரு நாடுகளின சமாதான ஆர்வத்துக்கு ஓர் எடுத்துக் காட்டாகும்" என்று கூறினார்.

"சிம்லா ஒப்பந்தத்துக்கு வெளிநாடுகளின் நிர்ப்பந்தமே காரணம் என்று கூறப்படுவது உண்மையல்ல; எந்த நாடும் -- அது நட்பு நாடாக இருந்தாலும் சரி -- எதிரி நாடாக இருந்தாலும் சரி - நமக்கு யோசனை கூறவேண்டிய நிலையில நாம் இல்லை; நமது ஒற்றுமையையும் -- பலத்தையுமே நாம் நம்பியிருக்கிறோம.

சுதந்தரப் போராட்டக் காலங்களிலேயேகூட, வெளிநாட்டுச் சக்திகள் நம்மைப் பிரித்துவைத்து அவைகள் பயனடைந்து வந்தன; சுதந்தரம் கிடைத்த பிறகும் அதே வேலையை அவைகள் செய்து வந்தன.

இந்தியா -- பாகிஸ்தான் இடையே நட்புறவு நிலவ வேண்டும் என்பதை இந்தியா எப்போதுமே விரும்பி வந்திருக்கிறது; பாகிஸ்தான் அதிபர் பூட்டோவும் இப்போது அதனை உணரத் தொடங்கியிருக்கிறார்; அவருக்கு நாம் -- பாகிஸ்தானைவிட மேலான நிலையில் இருக்கும் காரணத்தினால் -- ஆதரவு தரவேண்டியது அவசியமாகும்; அதன் துவக்கமே சிம்லா ஒப்பந்தமாகும்.

"நாட்டில் விலைவாசி நிலைமை கடுமையாக இருந்துவருவது குறித்து விவாதிக்க அவையை ஒத்திவைக்க வேண்டும்" என்று எதிர்க் கட்சியினரால் கொண்டு வரப்பட்ட தீர்மானத்தை அவைத் தலைவர் அனுமதிக்காததால் எதிர்க் கட்சிஉறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்; தி. மு. கழகம்—முஸ்லிம் லீக் — இடது கம்யூனிஸ்டு— சிண்டிகேட் காங்கிரசு—ஜன சங்கம் — சுதந்தரா — சோஷலிஸ்டுக் கட்சி ஆகியவைகள் வெளிநடப்புச் செய்தன.

# வேளாண்மைத் தொழிலாளர் ஊதியச் சட்டம்

## மேலும் 3 ஆண்டுக்கு நீடிப்பு

சென்னை, ஆக. 1—

தமிழ்நாடு வேளாண்மைத் தொழிலாளர் நியாய ஊதியச் சட்டத்தை ஆகஸ்டு 4-ம் நாள் முதல் மூன்றாண்டுகட்கு நீடித்து அவசரச் சட்டம் ஒன்றை ஆளுநர் பிறப்பித்திருக்கிறார்.

சாகுபடி பருவத்திலும் -- அறுவடையின் போதும் ஒவ்வொரு நிலச் சொந்தக்காரரும், தாங்கள் அமர்த்திக்கொண்டுள்ள பண்ணைத் தொழிலாளர்கட்குச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு நியாய ஊதியத்தைத் தர சட்டம் வகை செய்கிறது; நியாய ஊதியம் தருவதைச் செயல்படுத்தவும் சட்டம் வகை செய்கிறது.

## நடக்க இருப்பவை

### பொதுக்கூட்டங்கள்

### 3--8--72

**சத்திரப்பட்டி**

தி. மு. க. சார்பில் மாலை 7-மணிக்கு நடுத் தெருவில்; தலைவர்: அ. சங்கரன்; பேசுவோர்: திருவை ஆ. அண்ணாமலை, டி. கே. கே. பாஸ்கரன், ப. கருப்பஞானியார், எம். ஐயனார், எம். அருணாசலம் மற்றும் பலர்.

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சார்ந்தவர்களான தலைமையமைச்சரும் -- மத்திய உள்துறை இணை அமைச்சரான கே. சி. பந்த்தும் சென்று பார்த்திட வேண்டும்.

"உ. பி. போலீசு -- ஆயுதப் படை ஆகியவற்றின் இந்த முஸ்லிம் எதிர்ப்புப் போக்குக் காரணம், அரசு நிர்வாகத்திலும் -- குறிப்பாகப் போலீசு, ஆயுதப் படை ஆகியவற்றின் நிர்வாகத்திலும், சுதந்தரத்துக்குப்பின் பிரதிநிதித்துவமே இல்லாமல் போய்விட்டதுதான்" என்று முஸ்லிம்கள் பொதுவாகத் தெரிவிக்கின்றனர்.

இந்த அக்கிரமங்கள் இனி நேரிடாவண்ணம் தடுக்கவும், முஸ்லிம் மக்களின் உள்ளங்களில் மீண்டும் நம்பிக்கையை ஏற்படச் செய்யவும் அரசு நிர்வாகம் -- போலீசு -- ஆயுதப் படை ஆகியவற்றிலும் முஸ்லிம்களுக்குப் போதுமான பிரதிநிதித்துவம் ஏற்படச் செய்ய வேண்டும்.

முஸ்லீம் லீகைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஏற்கனவே இந்த நகருக்குச் சென்று வந்ததால், எங்கள் குழு அலிகாருக்குச் செல்லவில்லை; அங்கும் போலீசு -- ஆயுதப் படை ஆகியவற்றின் அக்கிரமங்களால் முஸ்லீம் மக்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்; போலீசுத் துப்பாக்கிச் சூட்டில் ஒரு முஸ்லீம் இறந்திருக்கிறார்; அலிகார் சட்டத்திற்கு எதிராகப் பங்கேற்றார்கள் என்பதற்காக உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் பல முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

போலீசார் ஒரு முஸ்லிம் ஒட்டலைக் கொள்ளையடித்து -- அதை ஒரு துணைப் போலீசு நிலையமாக மாற்றியிருக்கிறார்கள்; இதை முஸ்லிம் லீகைச் சேர்ந்தவர்களே நேரில் பார்த்திருக்கிறார்கள்.

மக்களை எலிப் பொறியில் எலிகளைப் பிடிப்பதுபோல் பிடித்தனர்; நாய்களைச் சுடுவதுபோல் சுட்டனர்! இப்படி பெரோசாபாத்தில் அறுபதுபேர் -- வாரணாசியில் ஒன்பது பேர் -- அலிகாரில் ஒருவர் -- சுடப்பட்டு இறந்திருக்கிறார்கள்! ஆளும் காங்கிரசைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சுபத்ரா ஜோசி இதை ஒப்பியிருக்கிறார்.

முஸ்லீம் சமூகம் இழந்துள்ள சொத்துக்களின் மதிப்பு மட்டும் இரண்டு கோடி ரூபாயிலிருந்து மூன்று கோடி அளவில் இருக்கும் என்று நாங்கள் கருதுகிறோம்.

இத்தனைத் துன்பங்களுக்கும் துயரங்களுக்கும் பொறுப்பாளியான உ. பி. முதலமைச்சர், சேதமுற்ற கல்வி நிலையங்களைப் பழுது பார்க்கவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கும் -- அதிலும் போலீசு -- இன்ஸ்பெக்டர் ஜெனரல் விசாரணை நடத்திக்கொண்டிருக்கும்போது ஏற்பட்ட நட்டம் மூன்று கோடி ரூபாய் அளவினதாக இருக்கும்போது, 'ஏழு இலட்சம் ரூபாய் தரப்படும்' என்று அறிவித்திருப்பதானது, ஏளனம் செய்யப்படுவதாகவே எங்களுக்குத் தோன்றுகிறது.

தாராளச் சிந்தைக்கும் -- சகிப்புத்தன்மைக்கும் பேர்பெற்ற இந்த நானிலத்தில், தன்னை ஒரு மதக் சார்பற்ற சோசலிச சனநாயக அரசு என்று கூறிக்கொள்ளும் உண்மையான ஒரு அரசு, மக்களின் உண்மையான ஆவலாதிகளைப் புறக்கணித்து -- சிறுபான்மை மக்களின் விருப்பங்களைப் புரிந்துகொள்ளாமல் கர்வத்தோடும், சிந்தனையற்ற முறையிலும் நடந்துகொண்டிருப்பது எங்களால் புரிந்துகொள்ளவே முடியவில்லை."

# தாழ்த்தப்பட்டோர் குடிசைகளுக்குத் தீ

## 10 பேர் உயிருடன் எரிக்கப்பட்ட கொடுமை

இலட்சுமணபுரி ஜூலை 31

"உத்தரப் பிரதேச மாநிலம் மூராதாபாட் மாவட்டத்தைச் சேர்ந்த மச்சாரியா எனும் கிராமத்தில தாழ்த்தப்பட்ட மக்கள் 10 பேர் உயிருடன் எரிக்கப்பட்டனர்"

என்று உ. பி. இந்திரா காங்கிரசுத் தலைவர் இராசேந்திர குமாரிடம், தாழ்த்தப்பட்ட மக்கள் புகார் கூறியிருக்கின்றனர்.

ஒரு மாதத்துக்கு முன்பு அங்கு தாழ்த்தப்பட்ட மக்கள் வாழும் பகுதியில் உள்ள குடிசைகளுக்குத் தீ வைக்கப்பட்டதாகவும், இதில் 5 பெண்களும் -- 5 குழந்தைகளும் கருகிச் செத்ததாகவும் அவர்கள் முறையிட்டிருக்கின்றனர்.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

## என். வி. நடராசன்

### நிகழ்ச்சிகள்

ஆக. 2 முற்பகல் 11 மணி; கும்பகோணம ஆனைக்காரன் பாளையம வரவேற்பு; மாலை 3 30 மணி: நகராட்சி பள்ளி -- படத திறப்பு; மாலை 4-30 மணி: சிறியமலர் உயர்நிலைப்பள்ளி வேதநாயகா விழா; இரவு 7 மணி: பொது மக்கள வரவேற்பு -- 30-வது வட்ட கழகக் கூட்டத் திறப்பு.

ஆக. 3: சேலம் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுதல்.

ஆக. 4, 5, 6: மதுரை.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பூம்புகார் கலைக்கூடக் குழுக் கூட்டம், தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் கே. ஏ. நம்பியார் தலைமையில நடைபெற்றது; கலைக் கூடத்தை, அண்ணா பிறந்த நாளன்று முதலமைச்சர் கலைஞர் அவர்களைக் கொண்டு திறந்து வைப்பதென அதுபோது முடிவு செய்யப்பட்டது.




அடுத்த குழந்தை இப்போது வேண்டாம்
இரண்டுக்குப் பிறகு எப்போதும் வேண்டாம்

அருகிலுள்ள மருத்துவ நிலையத்தில் ஆய்வுரை பெறுக

வெளியீடு: நலவழி—குடும்ப நலத் துறை இயக்குநர் அலுவலகம், சென்னை-6.


# தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம்

31-7-1972 அன்று இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற 46-வது குலுக்கல் முடிவுகள் - பரிசுகள் பெற்ற எண்களின் விவரம்:--

## 'ஜே. கே.' வரிசை

### ஒரு முதல் பரிசு: ரூ. 1,00,000

### 887595

5 இரண்டாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ.10,000 விதம்

| | | | |
|---|---|---|---|
| 020156 | 146952 | 703839 | 829609 |
| 829457 | | | |

10 மூன்றாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 5,000 விதம்:

| | | | |
|---|---|---|---|
| 004453 | 154780 | 367388 | 372475 |
| 460301 | 580376 | 603875 | 609722 |
| 895684 | 914688 | | |

50 நான்காவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்

| | | | |
|---|---|---|---|
| 031233 | 052458 | 076289 | 100421 |
| 109579 | 119348 | 130663 | 168390 |
| 188601 | 207388 | 232733 | 241662 |
| 241813 | 248530 | 256744 | 282041 |
| 286916 | 289999 | 332398 | 333187 |
| 371263 | 385142 | 386688 | 420188 |
| 456778 | 473088 | 504471 | 508013 |
| 612352 | 624283 | 627065 | 669695 |
| 690299 | 731658 | 740454 | 788021 |
| 832794 | 844312 | 864048 | 878232 |
| 922188 | 925223 | 931055 | 931376 |
| 951608 | 959342 | 962163 | 984384 |
| 989353 | 998819 | | |

1,000 ஐந்தாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்

00-லிருந்து 99-வரையிலான எண்களில துவங்கி கீழ்க்காணும் எண்களில முடிவடையும் எல்லா எண்களுக்கும்:—

| | | | | |
|---|---|---|---|---|
| 1169 | 2239 | 2398 | 2816 | 3753 |
| 4195 | 4911 | 6851 | 7596 | 8325 |

## 'ஜே. எல்.' வரிசை

### ஒரு முதல் பரிசு: ரூ. 1,00,000

### 758003

5 இரண்டாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 10,000 விதம்

| | | | |
|---|---|---|---|
| 006141 | 006184 | 095889 | 353939 |
| 426829 | | | |

10 மூன்றாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 5,000 விதம்

| | | | |
|---|---|---|---|
| 002700 | 209579 | 224690 | 321012 |
| 334363 | 339284 | 642652 | 867349 |
| 888357 | 998350 | | |

50 நான்காவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 1,000 விதம்

| | | | |
|---|---|---|---|
| 002229 | 008714 | 010294 | 018195 |
| 029840 | 062912 | 088074 | 134283 |
| 197442 | 284638 | 288221 | 312381 |
| 322814 | 338312 | 346286 | 411123 |
| 458420 | 503055 | 523191 | 523510 |
| 540583 | 551957 | 627536 | 632984 |
| 635339 | 640408 | 652874 | 680449 |
| 725228 | 738671 | 749354 | 758468 |
| 766183 | 769091 | 779159 | 779651 |
| 781331 | 819362 | 821362 | 829094 |
| 847986 | 872088 | 873704 | 878758 |
| 892022 | 905099 | 933616 | 986419 |
| 990850 | 992132 | | |

1,000 ஐந்தாவது பரிசுகள்—
ஒவ்வொன்றும் ரூ. 100 விதம்

00-லிருந்து 99-வரையிலான எண்களில துவங்கி கீழ்க்காணும் எண்களில் முடிவடையும எல்லா எண்களுக்கும:—

| | | | | |
|---|---|---|---|---|
| 0337 | 1995 | 2825 | 2897 | 3610 |
| 5596 | 6740 | 8152 | 8709 | 9975 |

முதல் பரிசு, இரண்டாவது பரிசு பெற்ற சீட்டுக்களை வைத்திருப்பவர்கள், பரிசுத் தொகையைப் பெற சென்னை அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழக அரசுப் பரிசுச் சீட்டுத் திட்ட இயக்குநர் அலுவலகத்திலும், 3-வது பரிசுமுதல் 5-வது பரிசுவரை பரிசு பெற்ற சீட்டுக்களை வைத்திருப்பவர்கள், பரிசுத் தொகையைப் பெறத் தமிழகத்தில் உள்ள எந்த ஒரு துணைக் கருவூலத்திலும் அதற்குரிய படிவங்களை நிரப்பிக் கொடுத்துப் பரிசுகளைப் பெறலாம்.

எழுதித் தரவேண்டிய படிவங்கள் பரிசுகள் பெறவேண்டிய அலுவலகங்களில் கிடைக்கும. விண்ணப்பங்களை நேரிலோ அல்லது ரிசர்வ் பாங்கு அட்டவணையில் உள்ள வங்கிகள் மூலமாகவோ கொடுக்கலாம்.

பரிசு பெற்ற எண்கள் அடங்கிய விவரப் பட்டியல் தமிழக அரசிதழ்களிலும் அச்சிடப்படுகின்றன; மேற்படி பட்டியல் வேண்டுவோர், 'உதவிப் பணி மேலாளர், அரசு வெளியீட்டு நிலையம், 166, அண்ணா சாலை, சென்னை-2' என்ற முகவரிக்கு எழுதி அதற்குரிய கட்டணத்தைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**பரிசுச் சீட்டு பற்றி விவரங்கள் எதுவும் தேவைப்பட்டால், 'இயக்குநர், தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2' என்ற முகவரிக்கு எழுத வேண்டும்.**

விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளக் கடைசித் தேதி: 27—8—1972

### 47-வது குலுக்கல்

47-வது பரிசுச் சீட்டுக் குலுக்கல் 1972 ஆகஸ்டு மாதம் 31-ந் தேதி நடைபெறும்.

**மொத்தப் பரிசுகள்: 2,132**

**மொத்தப் பரிசுத் தொகை: ரூ. 7,00,000**

அடுத்த குலுக்கல்: 31-8-1972 -- அடுத்த குலுக்கலுக்கு வரிசைகள்: 2 (இரண்டு) -- 'ஜே. எம்.' -- 'ஜே. என்.'

செலவு ஒரு ரூபாய்




வரவோ லட்ச ரூபாய்

இதுவரை 291 இலட்சாதிபதிகளைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது! உங்கள் பணம் உங்களுக்கும்—நாட்டிற்கும் உதவுகிறது! உங்கள் நல்வாய்ப்பினைச் சோதிக்கலாமே!

## ஒரு சீட்டின் விலை ரூ. 1-தான்

தே. அரங்கநாதன், இயக்குநர்,
தமிழ்நாடு அரசுப் பரிசுச் சீட்டுத் திட்டம், சென்னை-2.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி. அவர்கள் ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு, அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.